www.padippakam.com

# ஏழைதாசன்

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரல்

✷ ஜூன் - 2005 ✷ இதழ் எண் : 126 ✷ விலை ரூ. 5/-

## கண்ணிய எழுத்தாளர் !
## பெண்ணிய கருத்தாளர் !



சிறு தகவல் சேவை (SMS)

அன்பிற்கினிய வாசகர்களே,
ஆண்டுக் கட்டணம்,
வாழ்நாள் கட்டணம்,
புரவலர் கட்டணம் அனுப்பி
ஏழைதாசனுக்கு உயிரூட்டுங்கள் !
- ஆசிரியர்.

Read Back

படிப்பகம்

www.padippakam.com

# தமிழுணர்வுப் பாடல்கள்




பேரறிஞர் அண்ணாவின்
அன்பைப் பெற்றவர்

கலைஞர் மு. கருணாநிதியின்
நட்பைப் பெற்றவர்

சிங்கப்பூர் உ. துரைசாமி அவர்கள்

தமிழுணர்வுடன் பாடிய

தமிழ் முழக்கம் - 1,
தமிழ் முழக்கம் - 2

ஒலி நாடாக்களைக் கேட்டு மகிழுங்கள்.

"தமிழுண்டு தமிழ் மக்களுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு ."



வெளியீடு :

சிங்கப்பூர். உ. துரைசாமி,
1026, பெரியார் நகர்,
இராசகோபாலபுரம்,
புதுக்கோட்டை - 622 003.
தொலைபேசி : 0091-04322-262202
செல்லிடப்பேசி : 094432-81707



படிப்பகம்

www.padippakam.com

# என் இலக்கியப் பயணம்

நான் இலக்கியப் பயணத்தில் தொடர்ந்து பயணிக்க என் பயணத்தின் பாதையாய், படிக்கட்டாய் தொடர்ந்து என் நரம்பின் குருதியாய் ஆதரவு தரும் என் அன்புக்குரிய வாசகப் பெருமக்களே...! வணக்கம்.

முன்னர் ஆறுதடவைகள் உங்களுடன் "நிலமாகி, வெந்தவனம், அன்னை அபிராமி பஜனைப் பாடல்கள், பக்திப் பஜனைப் பாமாலை, நெஞ்சத்து நெருப்பு, பச்சை இறகு" போன்ற எனது படைப்புக்களை உங்களுக்குத் தந்து உள்ளேன். நீங்கள் நீட்டிய அன்புக் கரத்தின் உற்சாகத்தின் மிகுதியால் மீண்டும் உங்களிடம் உளிகள் என்ற புதிய படையலான மின்பாக்களுடன் உங்கள் முன்வந்துள்ளேன். என்னை நீங்கள் வரவேற்பீர்கள் என்ற பூரண நம்பிக்கையோடு.




தமிழ் இலக்கிய வரம்பில் பலவிதமான பயிர்களை காலத்துக்கேற்ப பயிரிடவேண்டும் என்ற எனது இதயத்தின் துடிப்பில் தமிழ் வளர்ச்சி கண்ட நம்மினத்தின் வரலாற்றில் கவிதையே தமிழ்த்தாயகத்தின் முதல் பிள்ளையாய் காவியங்கள் காட்டி நிற்கின்றன. இந்த நேரத்தில் இடர்சூழ்ந்த எம்சமுதாயத்தின் எதிர்கால சந்ததிக்கு நாம் விட்டுச் செல்லும் விபரக்கொத்தாக வரலாற்றுத் தேடலாக இவை இருக்காதா என்ற சிந்தனையே இந்த வெளியீடுகளாகும்.

எனது இலக்கியப் பயணத்தில் தமிழகத்தில் வெளிவரும் பலவித சிற்றேடுகளில் ஒன்றான ஏழைதாசன் எனும் பெயருடன் புதுக்கோட்டையில் அச்சாகி அகிலமெலாம் வீதிவலம் வந்து தமிழ்ப்பணி ஆற்றி வரும் ஏழைதாசன் சஞ்சிகையில் தொடர்ந்து எழுதி பல வாசகரின் பாராட்டுக்களைப் பெற்ற இந்த மின்பாக்கள் என்ற புதிய நாமகர்ன தமிழ்ப்பாக்களை உங்களிடம் தருகின்றேன்.



எனது ஐந்தாவது வெளியீடான பச்சை இறகு என்ற ஹைக்கூவிற்க்கும் இதற்கும் வேற்றுமைகள் குறைவாக இருந்தாலும் ஏன் நாம் இதற்கு பெயரை தமிழில் எடுக்காமல் ஜப்பான் மொழிக்குச் செல்வதா என்று என்னுள் எழுந்த ஒருவகை ஆதங்கமே நான் இதற்கு மின்பாக்கள் என்று பெயரிட்டுள்ளேன்.

இந்தத் தொகுப்புக்கு பெருமை சேர்க்கும் தமிழக ஏழைதாசன் சஞ்சிகை ஆசிரியர் எஸ். விஜயகுமார் பி.ஏ அவர்கள் அணிந்துரை தந்ததற்கும். மாமதுரை கவிஞர் சங்கத்தலைவர் இரா. இரவி அவர்கள் சிறப்புரை தந்ததற்கும். மற்றும் என் வாழ்க்கைப்பயணத்தில் என்னுடன் பயணித்தது மட்டுமல்லாமல் என் இலக்கியப் பயணத்திலும் கூடவே பயணித்து என் தொகுப்புக்களை எல்லாம்வெளியீடு செய்து ஊக்குவித்து வெளியீடுகளுக்கு ஊட்டச்சத்தாய் உற்சாகம் தரும் அன்பு மனைவிக்கும் என்றும் நான் நன்றி உள்ளவன் என்பதை கூறி உங்களிடம் விடைபெறுவது.

அன்பின் அண்ணன்
**வேலணையூர் பொன்னண்ணா,**
டென்மார்க். (உளிகள் தொகுப்பிலிருந்து) ■

ஏழைதாசன் உங்கள் இல்லம் தேடிவர ஆண்டுக் கட்டணம் ரூ. 60 /- பணவிடை அனுப்பலாமே!



படிப்பகம்

www.padippakam.com

# செம்மொழி - சில செய்திகள்

## முனைவர் தமிழப்பன் மெய். மு., சென்னை - 17.

17-9-2004 அன்று செம்மொழி அறிவிப்பு வருகிறது. தலைப்பைப் பார்த்து மகிழ்ந்த உள்ளம் உள்ளே படித்ததும் நொந்து அழுகிறது. நொந்த மனம் 'தமிழைக் கொச்சைப் படுத்தாதீர்கள்' என்று ஓலமிடுகிறது. தினமணிக்கு அதனை அனுப்ப மணவையாரின் கட்டுரை முந்திக்கொள்ள அதற்கு அமைச்சர் ஆ. இராசா மறுமொழி தர, அதன் பேரில் 'செம்மொழிச் சிக்கல்' கட்டுரை வெளியாகிறது. ஆண்டுப்பழமை 2500 ஆண்டு முதல் 3000 வரை இருக்க வேண்டும். ஆயிரம் ஆண்டுப் பழமை பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என்பன போன்ற கருத்துக்கள் அக்கட்டுரையில் இடம் பெற்றன. அதே நாளில் மணவையாரின் மடலும் வெளியானது. அதில் அவர் திமுக தலைவருடன் உரையாடியதில் 'உண்மை நிலை தான் கருதியது போல இல்லை' என மனஅமைதியடைகிறார். அதன் பின் 27-9-04 அன்று இந்தியக் குடியரசுத் தலைவருக்கு இதில் தலையிட்டு மையஅரசிற்கு தக்க அறிவுரை வழங்குமாறு ஒரு மின் செய்தி அனுப்பப்படுகிறது.

செய்தித்தாள்களில் எதிரும் புதிருமான கருத்துக்கள் வலம் வர 'பழையதும் புதியதும்' என்ற விளக்கம் வெளிவருகிறது. அதன் பின் ஆவணக் காப்பகத்திலும், அரசு நூல்களிலும் திரட்டப்பட்ட அரிய செய்திகள் அடங்கிய 'அன்று முதல் இன்றுவரை தமிழுக்கு நேர்ந்த அவமானங்கள்' தமிழர் முழக்கத்திலும், அன்பு வணக்கத்திலும் வெளியிடப்பட்டன. 26-11-04 அன்று குடியரசுத் தலைவருக்கு ஒரு நேர் மடல் அனுப்பப்பட்டது.

3-12-04 அன்று இந்தியத் தலைமை அமைச்சருக்கு ஒரு மின்னஞ்சல் வழி வேண்டுகோள் வைக்கப்பட்டது.

அதன் பின் 5-12-04 அன்று தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாற்பதின் மருக்கும் மாநிலங்கள் அவை உறுப்பினர்களுக்கும் 2000 ஆண்டுப்பழமை, ஒரே பட்டியல், கல்வித் துறையின் கீழ் அறிவித்தல் ஆகியவற்றை வலியுறுத்தி மைய அரசை வற்புறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

'செம்மொழிக்கு 2 பட்டியலா? ' என்ற தலைப்பில் முனைவர் தமிழப்பன் சில உண்மைகளைத்தோலுரித்திருக்கிறார்' என்ற குறிப்பு குமுதத்தில் வருகிறது. தமிழ் மையம் ஏற்பாடு செய்த ' செம்மொழித் தமிழ், சிந்தனை அரங்கு தள்ளி வைக்கப்படுகிறது. 13-12-04 அன்று மாநிலங்கள் அவையில் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் செம்மொழி ஆணைக்கு எதிராக எந்தப் புகாரும் வரவில்லை 'என்று தெரிவிக்க அந்த ஆணையை அனுப்பித்தருமாறு அனுப்பிய தொலைநகல் வேண்டுகோளுக்கு இதுவரை மறுமொழி இல்லை 'ஆயிரம் ஆண்டுப்பழமை அதிகாரப்பூர்வமான செய்தி அல்ல' என்று தி.மு.க.தலைவர் கூறியதை மணவையாரின் தினமணியில் வந்த 'வதந்தி அல்ல உண்மை' மடல், உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. இதற்கிடையில் இரண்டு பேர் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

செம்மொழித்தேர் தரையிறங்கி விட்டது. அதைத் தூக்கி நிறுத்தி இழுத்துச்சென்று தமிழ்க்கோயில் முன் நிறுத்துவார் யார்?

தமிழக ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும் ஒரு வேண்டுகோள் அனுப்பப் பட்டுள்ளது.

'தமிழ் விடு தூதின் ஆசிரியர்' 'விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்' என்ற படி விண்ணப்பம் செய்திருக்கிறோம். எப்போது விடியும்? யாருக்குத் தெரியும்? ■

எல்லாவிதமான தொடர்புகளுக்கும் :-
ஆசிரியர்,
ஏழைதாசன் திங்கள் இலக்கிய இதழ்,
26, அடப்பன்வயல் 8 ஆம் வீதி,
புதுக்கோட்டை - 622 002.
தொலைபேசி இலக்கம்
0091 - 04322 - 226 426.

உங்கள் படம்
முகப்பு அட்டையில்
வெளியிடவும்,
தன்குறிப்பு
இடம் பெறவும்
புரவலர் கட்டணம்
செலுத்தலாமே!



படிப்பகம்

www.padippakam.com

# 'சர்வதேசத் தமிழர்' தொடர்ந்து வெளிவருகிறது

## -சிறப்பாசிரியர் விளக்கம்

வணக்கம். தங்களுடைய பணி மிகச் சிறந்தது. ஏழைதாசன் பத்திரிகையின் மூலம் தாங்கள் செய்துவரும் தமிழ்ப்பணி பாராட்டுதலுக்குரியது. தங்களது சீரிய முயற்சியையும், தன்னம்பிக்கையையும் நான் வியந்து மகிழ்கிறேன்; பாராட்டுகிறேன்.

ஏழைதாசன் ஏப்ரல்'05 இதழில் மதிப்பிற்குரிய நண்பர் நார்வே நல்லையா சண்முகப் பிரபு அவர்கள் தங்களோடு தொலைபேசியில் உரையாடியதன் சுருக்கத்தை வெளியிட்டிருந்தீர்கள், நன்று.



அதன் தொடர்பாக - நார்வேயிலிருந்து, என்.எஸ். பிரபு அவர்கள் 'சர்வதேசத் தமிழர்' இதழைத் தொடர்ந்து செயலாற்ற இயலாதது குறித்து நான் அறிவேன். ஆயினும், நண்பர் பிரபு அவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, நான் 'சர்வதேசத் தமிழர்' இதழின் சிறப்பாசிரியராக இருந்து கொண்டு என்னுடைய முயற்சியில் வருடத்திற்கு ஒன்றாக சர்வதேசத் தமிழர் இதழைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதை உங்களுக்கும், உங்கள் மூலமாக திரு.என்.எஸ்.பி. அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, 'சர்வதேசத் தமிழர்' தொடர்ந்து வெளிவருகிறது. அது நிறுத்தப்பட்டு விட்டது என்று என்.எஸ்.பி. அவர்கள் ஆதங்கப்பட வேண்டாம்.

தமிழுக்காக, இந்தச் சிறிய பணியை நான் எனது தனிப்பட்ட முயற்சி, நிதி கொண்டு செய்து கொண்டிருக்கிறேன் என்பதை மிக மகிழ்ச்சியோடு கூறிக் கொள்கிறேன்.

1. 'சர்வதேசத் தமிழர்' - சவுதி அரேபியச் சிறப்பிதழ்,

2. 'சர்வதேசத் தமிழர்' - தமிழகச் சிறப்பிதழ் (இந்தியா சென்றதும் அனுப்புகிறேன்)

3. 'சர்வதேசத் தமிழர்' - புரட்சி பெண்களடி இதழ்களின் ஒவ்வொரு படிவத்தைத் தங்களின் மேலான பார்வைக்கு அனுப்புகிறேன்.

அதோடு 'சர்வதேசத் தமிழர்' சூரியப் பெண்கள் இதழ் தயாராகிக் கொண்டிருக்கிறது.

**விஜயலெட்சுமி மாசிலாமணி,**
ரியாத், சவூதிஅரேபியா.

## விடுபட்ட இரண்டு அய்க்கூ

| | |
|---|---|
| 69.<br>பருவமாற்றம் ஏமாற்றம் தராது<br>விற்ற வயலில்<br>இறால் விளைகிறது !<br>– அ. அருள்மொழி வேந்தன்,<br>போஸ்நகர், புதுக்கோட்டை-1. | 140.<br>அய்யனார் கையில்<br>எப்போதும் அரிவாள்<br>மனிதர்களுக்கு பயந்து !<br>– முகிலரசு,<br>திருக்கோகர்ணம், புதுக்கோட்டை-2. |

மேற்கண்ட இரண்டு கவிதையும் அய்க்கூ - 250 இல் விடுபட்டு விட்டது. சேர்த்துக் கொண்டு, திருத்தி வாசிக்குமாறு அன்பு வாசகப் பெருமக்களை வேண்டுகிறோம். தவறுக்கு வருந்துகிறோம். - ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

## செய்யாறில் ஏழைதாசன்

சென்ற இதழ் மே' 05 அய்க்கூ சிறப்பிதழ் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு, திருவத்திபுரம் அதனைச் சுற்றி உள்ள பகுதியில் வாழும் தமிழ்க் கவிஞர்கள் பலருக்கும் அறிமுக இதழாக அனுப்பப்பட்டது. பட்டுக்கோட்டை சீனிவாசன் அவர்களின் முழு ஆதரவு பாராட்டத்தக்கது.

## வாழிய பல்லாண்டு

உலகமெங்கும் கிளை பரப்பி
உயர்ந்து நிற்கும் ஏழைதாசன்
உண்மைத் தமிழை
உணர்ந்து பரப்பி-பாப்பரசர்
வாழ்த்தும் பெற்று
வளரும் ஏழைதாசன்
வாழிய பல்லாண்டு
வாழிய வாழியவே !



– இனுவை சக்திதாசன்,
டென்மார்க்.

**கவிஞர் தங்கம். மூர்த்தியின் –**

## மூன்று நூல்கள் வெளியீட்டு விழா

**புதுக்கோட்டை, மே. 1–** பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவையும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் இணைந்து புதுக்கோட்டை நகர் மன்றத்தில் கவிஞர் தங்கம். மூர்த்தியின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழாவை நடத்தின.



பாரதிதாசன் இலக்கியப் பேரவைத் தலைவர் முனைவர் எஸ். சுப்பையா அனைவரையும் வரவேற்றார். த.மு.எ.ச. மாநில துணைப் பொதுச் செயலாளர் நா.முத்துநிலவன் விழாவிற்கு தலைமை வகித்தார். புதுகை காவல்துறை கண்காணிப்பாளர் ஆர். ஆறுமுகம் இ.கா.ப. திருச்சி டாக்டர் பி. கிரி மறைவட்ட அதிபர் அமுதன் அடிகள், கவிஞர் ஜீவி, சொல்லருவி மு. முத்துசீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

'தங்கம் மூர்த்தி கவிதைகள்' நூலை எழுத்தாளரும் கூடுதல் காவல் துறை அலுவலருமான ஜி. திலகவதி இ.கா.ப. வெளியிட, முதன்மைக் கல்வி அலுவலர் வி. ராஜராஜேஸ்வரி பெற்றுக்கொண்டார். மேனாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப் பித்தன் வாழ்த்துரை வழங்கினார். அப்போதுஅட்டை டப்பா ஒன்றில் புறாவை அடைத்து, டப்பாவைத் திறந்தவுடன் புறா சிறகடித்து வெளியேற, பின் நூல் வெளியிடப்பட்டது.

'பொய்யெனப் பெய்யும் மழை' நூலை சாகித்ய அகாதமி உறுப்பினர் முனைவர் பாலா வெளியிட, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் பெற்றுக் கொண்டார். த.மு.எ.ச. மாநிலத் துணைச்செயலாளர் மதுக்கூர் இராமலிங்கம் வாழ்த்துரை வழங்கினார். தூளியிலிருந்து எடுத்து வந்து நூல் வெளியிடப்பட்டது.

'முதலில் பூத்த ரோஜா' நூலை திராவிட விழிப்புணர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் பி.டி. குமார் வெளியிட, புதுக்கோட்டை நகராட்சித் தலைவர் துரை. திவியநாதன் பெற்றுக் கொண்டார். த.மு.எ.ச. மாநிலக் குழு மு. முருகேஷ் வாழ்த்துரை வழங்கினார். ரோஜாக்கள் நிறைந்த கூடையிலிருந்து நூல் வெளியிடப்பட்டது.

நூலின் சிறப்புப் பிரதிகளை நகரில் பல முக்கியப் பிரமுகர்கள் பெற்றுக்கொண்டார்கள். நூல் அச்சிட்டாளர் எம்.எஸ். ரவிக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

கவிஞர்கள் ரமா, ராமநாதன், முரளி அப்பாஸ், எஸ். இளங்கோ, மு.பா., இரா. தனிக்கொடி, நீலா, அறிவொளி ராஜ்குமார், ப. முத்துப்பாண்டியன், ராசி பன்னீர்செல்வம், செம்பை முருகானந்தம், நெப்போலியன், கவிவர்மன், கீரைத்தமிழன், சுவாதீ, செ.முகேஷ், மதி போன்றோர் நூல் குறித்து பல அரிய கருத்துக்களைக் கூறினார்கள்.

மூன்று நூல்களையும் எழுதிய கவிஞர் தங்கம் மூர்த்தி தனது இலக்கியத் துறை அனுபவங்களை பகிர்ந்துகொண்டு ஏற்புரை நிகழ்த்தினார். கவிஞர் புதுகை பூவண்ணன் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க, விழா இனிதே நிறைவடைந்தது. ■



படிப்பகம்

www.padippakam.com

# பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் கைகளில்

ஏழைதாசன்

'எய்ட்ஸ் மருத்துவத்தின் தந்தை' பிப் '05 வெளியான கட்டுரையை பெரிய வடிவில் நகலெடுத்து டாக்டர் அ. தேவராஜன் கீழ்க் கண்ட அனைவருக்கும் அனுப்பி, அவரது எய்ட்ஸ் மருத்துவ கண்டுபிடிப்புக்கு உதவுமாறும் சட்ட சபையில் இது பற்றி கேள்வி எழுப்பி குரல் கொடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழக முதல்வர் மாண்புமிகு ஜெ.ஜெயலலிதா, கலைஞர். மு. கருணாநிதி, பேராசிரியர் க. அன்பழகன், துரைமுருகன், பரிதி இளம்வழுதி மற்றும் பல தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், கடந்த சட்டசபை கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்த நேரம், சட்டசபை விலாசத்திற்கே அத்தனை இதழ் பிரதிகளும் கடிதங்களும் அனுப்பப்பட்டன.

இதே போல் புதுதில்லி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கோரிக்கை அனுப்பப்பட்டது. மேதகு குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், மாண்புமிகு பிரதம மந்திரி மன்மோகன் சிங், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அன்புமணி, டாக்டர் இராமதாஸ், வைகோ.

மேலும் தமிழகத்தில், தனியார் மருத்துவமனை டாக்டர்கள், மருத்துவக் கல்லூரிகள், தனியார் மருத்துவமனைகள், சென்னை அப்போலோ மருத்துவமனை, மதுரை மீனாட்சி மிஷன், ஜவகர் மருத்துவமனை மற்றும் பிரபல டாக்டர்களுக்கு எல்லாம் அனுப்பி வைக்கப்பட்டது. ■

## தெளிவான பாதையை நோக்கி

இளைஞனே...
நீ வந்த வழியை
திரும்பி பார்க்காதே...
காலம் தான்
விரையம் ஆகும்
இனிபோகும்
வழியை
நோக்கி செல்
தெளிவான
வழி கிடைக்கும்
நீ செல்லும்
இடத்திற்கு
மட்டும் அல்ல
வாழ்க்கைக்கும் தான்...!

-ஆர்.கே. காந்திதாசன்,
கரடிப்பட்டி, நாமக்கல்.

**உறுப்பினர் கட்டணம் புதுப்பித்து விட்டீர்களா?**

ஏழைதாசன் வெளியீட்ட இயக்கம் - 250

▲ இதழ்ப் பெயர் : ஏழைதாசன்
▲ வலையேற்றியது : குறும்பாக்கள்
▲ வலைப்பக்கம் : சுவைத்த பக்கங்கள்

15-05-05 இல் வலையேற்றி ஆதரவளித்துள்ளார் பொள்ளாச்சி நசன்.

**தமிழம். வலை**

இணையத்தில் பார்த்து, எங்கு எழுதுங்களேன்! அழைக்க: 0091 - 04322 - 228 428

**இதழை இலவசமாகப் பெறுவது ஏழைதாசன் வளர்ச்சியை பாதிக்கும்.**



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் வட்டம்

**நல்ல முயற்சி**

ஏழைதாசன் மே மாத இதழ் 250 அய்க்கூ கவிஞர்களின் 250 கவிதைகளைக் கொண்ட தொகுப்பாக வெளியிடப்பட்டிருப்பது ஒரு சாதனைதான். ஏழைதாசன் அய்க்கூவின் வளர்ச்சிக்கும் வளத்துக்கும் தொடர்ந்து பணி புரிந்து வருவது போற்றுதலுக்கு உரியது. அய்க்கூ-50, அய்க்கூ-100, அய்க்கூ-200 என்ற முறையில் தொகுப்புகள் வெளியிட்ட ஏழைதாசன் இப்போது அய்க்கூ-250 வெளியிட்டிருப்பதும், அடுத்து அய்க்கூ-500 வெளியிடத் திட்டமிட்டிருப்பதும் பாராட்டப்பட வேண்டிய இலக்கியப் பணியாகும். உங்கள் ஆர்வமும், உழைப்பும் இத்தகைய வெற்றிகளை சாத்தியமாக்கியிருக்கின்றன. கவிஞர்கள் பலரும் பல்வேறு நோக்கிலும் தன்மையிலும் அய்க்கூ படைத்து அவரவர் ஆற்றலை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். நல்ல முயற்சி. ஏழைதாசன் பணிகள் வளர்க! வாழ்க!

– **வல்லிக்கண்ணன்**, சென்னை-5.

**ஒப்பற்ற பெரும்பணி**

இன்றைய சூழ்நிலையில் அய்க்கூ மனவளம் உலக மொழிகளில் விரிவடைந்து வருகின்றது. அய்க்கூ இயக்க அலை தாவுங்காலமாகவே உள்ள இந்தத் தருணத்தில் அய்க்கூ வாழ்வு முறை இலக்கியத்தில் மிகச்சிறப்பான இடத்தைப் பிடித்து வருகின்றது. தமிழ் அய்க்கூவியல் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் நம் ஏழைதாசன் ஆற்றி வருகின்ற ஒப்பற்ற பெரும் பணிக்கு எவ்வளவோ நன்றி சொல்ல வேண்டும். அய்க்கூ-250 பாக்களின் தேர்வில் அதிக கவனம் செலுத்தியுள்ளீர்கள். உலக அய்க்கூ தமிழ்க் கவிஞர்களை சிறந்த முறையில் அறிமுகம் செய்துள்ளீர்கள். உங்கள் ஒப்பற்ற பணியை வாழ்த்துகின்றேன்.

- டாக்டர் **இளங்கம்பன்**, பழனி.

**கருத்தானத் தொகுப்பு**

பெருமை நிறைந்த தமிழ்மொழியின்
பாட்டில் ஒன்றாம் 'துளிப்பா' வை
அருமை யான முறையினிலே
'அய்க்கூ' என்னும் பெயரினிலே
கருத்தாய்த் தொகுத்தே பெயர்பெற்றீர்
காசினி போற்ற உயர்ந்திட்டீர்!
கரும்பாய் இனித்த தேழைதாசன்
கனித்தமிழ் போலே வாழியவே!

– கவிமாமணி **சேலம் பாலன்**, ஈரோடு -11.

**திருக்குறள் போல்.....**

ஒவ்வொரு கவிதைக்கும் 10 பக்கங்கள் விளக்கம் தரும் வகையில் திருவள்ளுவரின் திருக்குறள்போல் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இந்த முயற்சி தொடரட்டும். எதிர்காலத்தில் காகிதம் மிக அதிக விலைக்கு வந்துவிடும். இனிமேல் சுருங்கச் சொல்லி விளங்கவைக்க வேண்டிய கட்டாய நிலையில் ஏழைதாசன் ஆசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது; வாழ்த்துக்கள். உங்களுடைய இதழ் தமிழ்மொழி, இன உறவுப்பாலமாக உள்ளது மிக்க மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். அடுத்து வெளிவரவுள்ள அய்க்கூ-500 நூல் வெளியீடு பற்றி முன்கூட்டியே தெரியப்படுத்தவும். உங்கள் முயற்சி தொடர்ந்து வெற்றிபெற வாழ்த்துக்கள்.

– **க.இரா. முத்துசாமி**, திருப்பூர்.

**அரிய முயற்சி**

அய்க்கூ சிறப்பிதழ் 249 கவிஞர்களின் ( பாவலர் கருமலைப் பழம் நீ என்பவரின் இரண்டு அய்க்கூ கவிதைகள் எண் : 69, 149) பங்களிப்போடு மிகச் சிறப்பாக கொண்டு வந்துள்ளீர்கள். தங்களின் இவ்வரிய முயற்சியை பாராட்ட வார்த்தைகளே இல்லை எனலாம். அந்த அளவிற்கு இதழின் வடிவமைப்பும், கவிதைகளும் என்னை வெகுவாக ஈர்த்தன.

– **சு. கணேஷ்குமார்**, சென்னை -42.

**இருபது பக்க ஈட்டி**

''எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்" எனும் பாவரசு கண்ணதாசன் தத்துவ முத்திரையோடும், பதிப்பழகோடும், புதுப்பொலிவோடும், புறப்பட்டிருக்கும் இருபது பக்க ஈட்டியை எடுத்து வைத்துக்கொண்டு இனிய தமிழில் இணைவரும் எதையும் நசுக்குவோம்! தனித்தமிழ் விதைக்கும் தாசனை வளர்ப்போம்! தழைக்கும் பயிரென இளையவர் துளிர்ப்போம்!

– பாவலர் **ஆறுமுகன்**, சேலம்.

அய்க்கூ சிறப்பிதழ் கண்டேன். சிக்கலான பணி. ஆர்வம் கொண்டு உழைத்திருக்கிறீர்கள், பாராட்டுக்கள். எனினும் புதிய கருப்பொருட்களில் அமைந்த அய்க்கூக்கள் குறைவே. படித்த சலிப்பை சில கவிதைகள் தருவதை தவிர்த்திருக்கலாம். ஒரே கவிஞரின் இரு கவிதையும் (எண் : 69, 149), ஒரே கவிதை இருமுறையும் (140, 197) பளு மிகுதியில்



படிப்பகம்

www.padippakam.com



# (பர்மா) மியன்மா நாட்டுத் தலைநகர் யாங்கோனில் திருவள்ளுவர் விழா

உலகத் தொழிலாளர் நாளான மே மாதம் முதல் நாளன்று (01-05-05) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இராமகிருஷ்ணா மண்டபத்தில் தமிழிசைக் கலைஞர்கள் இசைத்தமிழ் முழங்க, சன்மார்க்க சங்கத் துணைப் பொதுச் செயலாளர், மாண்புடைய **எஸ்.ஆர்.ஜி. இளங்கோவன்** அவர்கள் தலைமையில், **மு.கா. முனியாண்டி** அவர்கள் வரவேற்புரை வழங்க, கழகத் தலைவர் **கோ. கலைச்செல்வன்** அவர்கள் உரையுடன் திருவள்ளுவர் விழா நடைபெற்றது.

'தமிழர் தந்தை' சி.பா. ஆதித்தனாரின் நூற்றாண்டையும் போற்றப்பட்டது.

தமிழ்நாட்டு 'இராணி' வார இதழ் ஆசிரியர் **முனைவர் அ.மா. சாமி** அவர்கள், உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத் தலைவர் **டாக்டர் இரபியுதீன்** அவர்கள், செயலாளர் 'நம்ம ஊர் செய்தி' ஆசிரியர் **அ. அய்யூப்** அவர்கள் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருவள்ளுவர் விழாக் குழுச் செயலாளர் **எஸ்.பி. சேதுபதி,** தமிழர் அறநெறிக் கழகத்தினர் ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தனர். ■

## வாசகர் வட்டம் தொடர்ச்சி ...

ஏற்பட்ட கவனக்குறைவாக இருக்கலாம் என்றெண்ணுகிறேன். எனக்குப் பிடித்தவை : எண்கள் 1,3,15,83, 103, 114, 129, 202, 208 ஆகியவை.

- திருமயம் **பெ. பாண்டியன்**, காரைக்குடி.

**மாபெரும் சாதனை**

உலகில் எந்த ஒரு முன்னணி பத்திரிகையும் செய்யாத சாதனை இது. 250 கவிஞர்களின் கவிதைகள் அணிவகுப்பு... ஏழைதாசன் எனும் சிற்றிதழ் செய்த மாபெரும் சாதனை! மிகவும் பாராட்டுக்குரியது. அய்க்கூ 500 கவிதைத் தொகுப்பும் சிறப்பாக மலரும் என்பதற்கு இந்த இதழ் ஓர் எடுத்துக்காட்டு. மேலும் பல சாதனைகள் படைக்க என் இதய வாழ்த்துக்கள்.

- **ஞா. நெல்சன்**, மடத்தச்சம்பாடு, நெல்லை.

**நல்லாசிரியரின் நல்வாழ்த்து**

நான் ஏழைதாசன் வாழ்நாள் உறுப்பினர். திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறிலிருந்து க. இராசாமணி பேசுகிறேன். அணுவைப் பிளந்து கடலைப் புகட்டினாற் போல் கவிதைகள், செய்திகள், அச்சிடும்விதம், வெள்ளைத்தாளில் பளிச்சிடுகிறது. ஏழைதாசன் இலக்கிய இதழ் நன்றாக வந்து கொண்டிருக்கிறது. என்னை நீங்கள் முகப்பு அட்டையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்டு இருந்தீர்கள். தற்போது எனது நண்பர் கவிஞர் பட்டுக்கோட்டை சீனிவாசன் அவர்களை வெளியிட்டு இருக்கிறீர்கள். பாராட்டுக்கள். உலகம் முழுவதும் தொடர்புள்ள தாங்கள் செய்யும் தமிழ்ப் பணிக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள். திங்கள் தோறும் அட்டைப்படமாக பலரையும் வெளியிட்டு வரும் உங்கள் உள்ளம் பெரியது. எவரும் இப்படி செய்ய முன்வர மாட்டார்கள். உங்களுக்கு எப்படி இந்தப் பரந்துபட்ட எண்ணம் வந்தது? ஒருவேளை உங்கள் இரத்தத்திலேயே, கருவிலேயே இருந்திருக்க வேண்டும். ஒரு எழுத்தாளர் மற்ற எழுத்தாளரை உண்மையாகப் பாராட்டுவது கிடையாது. நான் தமிழாசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவன். உங்களை பாராட்டத்தான் முடிகிறது. உதவ முடியவில்லை. ஓய்வூதியத்தில் காலத்தை கழித்து வருகிறேன். கடுகு சிறியது என்றாலும் காரம் பெரியது வைத்தியத்திற்கு இன்றியமையாதது. அது போன்று உங்கள் இதழ் உள்ளது. மேலும் வளர்க! வாழ்க!

(எம்மோடு 18-05-05 அன்று முற்பகல் 11-15 மணி அளவில் தொலைபேசியில் உரையாடியதின் சுருக்கம்.) ■



படிப்பகம்

www.padippakam.com

### அப்துல்கலாமின் தாய்மொழிப் பற்றினால்



# ஜனாதிபதி மாளிகையில் முழங்கும் தமிழ் !



## கடிதங்களுக்கெல்லாம் தமிழிலேயே பதில் வருகிறது

**புதுக்கோட்டை, மார்ச். 31-**

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் தமிழ்ப்பற்று காரணமாக ஜனாதிபதி மாளிகைக்கு வரும் கடிதங்கள் அனைத்துக்கும் தமிழிலேயே பதில் எழுதப்பட்டு வருகிறது.

**தமிழ் மணம்**

கடந்த 2 ஆண்டுகளாக இந்திய குடியரசுத்தலைவர் மாளிகையில் இருந்து வரும் கடிதங்கள் அனைத்திலும் நல்ல தமிழ் மணக்கிறது. அழகிய தமிழ்ச்சொற்கள், தனித்தமிழ் வார்த்தைகள், தமிழில் கையெழுத்து என பார்க்க, படிக்க எத்தனை மகிழ்ச்சியாக உள்ளது. பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது.

உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானியான டாக்டர் அப்துல்கலாம் தான் மட்டுமல்லாமல் தனக்கு கீழே பணிபுரியும் செயலாளர்களையும் தமிழில் கடிதம் அனுப்ப, தமிழில் கையெழுத்திட செய்து உள்ளார்.

**முழுக்க முழுக்க தமிழில் பதில்கள்**

இவற்றுக்கு எல்லாம் என்ன காரணம்? இன்றைய குடியரசுத் தலைவராக இருக்கும் இந்தியாவின் முதல் குடிமகன் ஒரு தமிழர். தமிழ்வழிக்கல்வி பயின்றவர். தமிழ்ப்பற்றாளர் என்பதால் தான் என்னவோ தெரியவில்லை.

புதுக்கோட்டை பத்திரிகையாளர் ஏழைதாசன் விஜயகுமார் என்பவருக்கு குடியரசுத்தலைவரின் கூடுதல் செயலாளர் எழுதிய கடிதத்தில் பதவி, முகவரி தவிர அனைத்தும் முழுக்க, முழுக்க தமிழிலேயே பதில்கள் இடம் பெற்று இருந்தது.

நன்றி : **மாலைமுரசு, இராணி** வார இதழ் ■

**ஏழைதாசன் தொடர்புக்கு**
**0091 - 04322 - 226 426**



படிப்பகம்

www.padippakam.com




# இந்தியப் பேனா நண்பர் பேரவை மருத்துவ முகாம்

**மும்பை, மார்ச் . 15 –**

இந்தியப் பேனா நண்பர் பேரவையின் 10 வது ஆண்டு விழாவை முன்னிட்டும், மார்ச் – 12 நண்பர்கள் தினத்தை முன்னிட்டும் வசந்தா நினைவு அறக்கட்டளையினருடன் இணைந்து இலவச புற்றுநோய் விழிப்புணர்ச்சி மற்றும் கண்டறியும் முகாம் சிறப்பாக நடைபெற்றது.

இம்முகாமில் 50-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பரிசோதனை செய்து கொண்டனர்.

இந்தியப் பேனா நண்பர் பேரவைத் தலைவர் எம். கருண் அனைவரையும் வரவேற்றார். டாக்டர் கினியா, டாக்டர் வினோத் குப்தா மற்றும் டாக்டர் அஞ்சலி ஆகிய மருத்துவர் குழுவினர் புற்றுநோய் கண்டறிவதற்கான பரிசோதனை சிகிச்சையை செய்தனர்.

பாண்டுப் பிரைட் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இந்த முகாமை பள்ளி முதல்வர் இரா. இயேசுராஜ் சாமுவேல் துவக்கிவைத்தார். காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையிலும் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை சிகிச்சை நடைபெற்றது.

பின்னர் இந்தியப் பேனா நண்பர் பேரவை சார்பில் ஓர் பாராட்டு விழா நடைபெற்றது. பேரவையின் புரவலர்கள் எம். ஸ்டான்லி, பி. சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்க டாக்டர் கினியா நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

தொழிலதிபர் எஸ். கந்தசாமி ஜரோலி காமராஜ் நாடார் நற்பணி மன்ற துணைத்தலைவர் செல்வராஜ் நாடார் வசந்தா நினைவு அறக்கட்டளை பொறுப்பாளர் திருமதி ஜெயலட்சுமி, மும்பை சரத்குமார் தலைமை ரசிகர்

நற்பணி மன்ற தலைவர் என்.ஆர். குருபுத்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பேரவைத் தலைவர் எம். கருண் புரவலர்கள் எம்.ஸ்டான்லி, பி. சுரேஷ் ஆகியோர் முகாமில் பங்கேற்ற மருத்துவர்களுக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டுத் தெரிவித்தனர். பேரவை பொருளாளர் கவிராஜ் வசந்தா நினைவு அறக்கட்டளை பொறுப்பாளர் திருமதி . ஜெயலட்சுமிக்கு பொன்னாடை வழங்கினார்.

இந்த முகாம் வெற்றிகரமாக நடைபெற உறுதுணையாக இருந்த பலருக்கும் எம். கருண் பாராட்டுத் தெரிவித்தார்.

முன்னாள் தலைமை ஆசிரியர் எஸ். ஜோதி கணேசன் மருத்துவ முகாமின் நற்பயன்கள் குறித்து சிற்றுரை நிகழ்த்தினார்.

பேரவையின் தலைவர் எம். கருண், பொருளாளர் கவிராஜ் , பொதுச் செயலாளர் எல். பாஸ்கரன், துணைச் செயலாளர் ஆர். சந்திரன், இணைச் செயலாளர் செந்தூர் நாகராஜன் மற்றும் உறுப்பினர்கள் முகாமுக்கான ஏற்பாடுகளை வெகுசிறப்பாகச் செய்திருந்தனர்.

**புதிதாக இதழ் பெறுபவர்கள் தொடர்ந்து பெற உறுப்பினர் கட்டணம் அனுப்புங்களேன் !**

**வான்வழி, கடல் வழி இதழ் பெறுபவர்கள் அன்புகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.**



படிப்பகம்

www.padippakam.com

அட்டைப்படக் கட்டுரை

# கண்ணிய எழுத்தாளர்! பெண்ணிய கருத்தாளர்!

என் ஆரம்பக் கல்வி கோவை நாவலர் பாடசாலையிலும், புலமைப் பரிசில் பரீட்சையின் சித்தியால் யாழ் கனகரட்னம் மகாவித்தியாலயத்திலும், பின்னர் கிறிஸ்தவ கல்லூரி கோவையிலும், ஏ.எல். வரை (கல்விப் பொதுத்தராதர உயர்வகுப்புவரை) தொடர்ந்தது. பாடசாலைக் காலங்களில் பேச்சுப் போட்டி (இரண்டாம் பரிசு) நாடகம், திருக்குறள் மனனப் போட்டி, விழாக்களில் பாடல், உடற்பயிற்சிக்குழுநிலைத் தலைவி, தையல், இயந்திரத்தில் பூவேலை (விசேடப்பயிற்சி), ஓவியம், இசை (சங்கீதம்) நடனத்திலும் பங்கு பற்றியதுண்டு.



எனது சித்தப்பாவின் பிரத்தியேக மாலை வகுப்புகள் (Murugesu Tutoryயில்) நடத்தும் இடத்தில், காலையில் பாலர் வகுப்பை (நர்சரி) ஒருசில வருடங்கள் கோப்பாயில் நடத்தினேன்.

என் அப்பா ஒரு வாசிப்புப் பிரியர். அவரால் தூண்டி வளர்க்கப்பட்டது எனது வாசிப்பும். தமிழில் திருவுடையவர் என்னுடன் திருமணத்தில் இணைந்தார். தில்லானா ஆடிய அவரின் காதல் கவிதைகளும் என்னுள் கவிச்சுடரேற்றியது.

1976-ல் இலங்கை வானொலி வானலையில் என் முதல் கவிதை தவழ்ந்தது. சில கவிதைகளின் பின் இடைவேளை.

1987-ல் டென்மார்க்கிற்கு வருகை, இங்கு உள்ளூர் சஞ்சிகைகளான : அரும்பு - சஞ்சீவி - காகம் - கற்பகம் - வான்பதி ஆகியவைகளில் என் கவிதைகள் - சிறுகதைகள் - மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் வெளியாகி என் ஆர்வம் தூண்டப்பட்டன.

1993-ல் பிள்ளைகள் பராமரிப்புப் பற்றிய 3 வருட டெனிஸ் மொழியில் பயிற்சிப்படிப்பு முடிந்த போது என் பெயருடன் "பெட்டகோ" (Pedagogue) எனும் தகுதியும் என்னுடன் இணைந்தபோது சமூகத்திற்காக உள்ள எனது கடமை பொறுப்புணர்வாக என்னுள் விரிந்தது அன்றிலிருந்து 3 வயதிலிருந்து 14 வயதுப் பிள்ளைகளுடன் பெட்டகோவாக வேலை செய்கிறேன்.

ஐரோப்பிய வானலையில் TRT தமிழ் ஒலி - தமிழ் ஒளி 1996 இல் (Tamil & Television) பிரான்சில் தொடங்கிய போது வானொலியில் ஸ்கன்டிநேவியன் நேரம் எனும் நிகழ்வை டென்மார்க்கிலிருந்து சகோதரர் திரு. T. இராஜேந்திரம் நடத்தினார். இதில் எனது ஆக்கங்கள் திரு. இராஜேந்திரத்தின் குரலிலும் எனது குரலிலும் ஒலிபரப்பாகியது எனக்கு ஊக்கமும் - உற்சாகமும் தந்தது.

(TRT) வானலைக்காக லண்டனிலிருந்து முதல் ஆடியோ கலையக இயக்குனரும் செய்தியாளருமாகிய திரு. நடாமோகன் குழுவினரால் நடத்தும் லண்டன் டைம் எனும் ஒலிபரப்பிலும் என் ஆக்கங்கள் ஒலிபரப்பப்பட்டது.

ரி.ஆர்.ரி (TRT) வானலையில் கவிதை நேரங்கள் - பெண்கள் நிகழ்ச்சிகள் என அவ்வப்போது கலந்து கொள்வதுண்டு. இவை அனைத்தும் ஆர்வமும் ஊக்கமும் தந்தவைகளாகும். இந்நிகழ்ச்சிகள் பற்றி வானொலி - தொலைக்காட்சிகட்கு விமர்சனங்கள் எழுதுவேன். அவைகள் படிக்கப்பட்டு இயக்குனர் நாயகம் திரு. சபாபதி. சுப்பையா குகநாதன் தொலைக்காட்சியில் தோன்றி பதில்கள் தருவது எனக்கு இன்னும் மகிழ்வையும் தூண்டுதலையும் தந்து தன்னம்பிக்கைத் தூணாகியது.



படிப்பகம்

www.padippakam.com

'லண்டன் டைம்' கவிஞரும், செய்தியாளருமாகிய திரு ப.வை. ஜெயபாலன் 'இந்த வாரக் கவிஞர்' எனும் நிகழ்வில் ஒரு வாரக் கவிஞராக என்னை பேட்டி கண்டு சிறப்பு தந்தார்.

இவர்கள் அனைவரின் அங்கீகாரமும் படிப்படியாகி தூண்டுகோலாகி இக்கவிதைத் தொகுதியை வெளிக்கொண்டுவர உதவியது. ஈழத்து பிரபல எழுத்தாளரும் – டென்மார்க்கின் முன்னோடி எழுத்தாளருமான 'முல்லையூரான்' தந்த ஆலோசனைகளும் கிரியா ஊக்கியாக இருந்தன. இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

என் அனுபவங்கள் – உணர்வுகள் – உறுத்தல்கள் – மகிழ்வுகள் – தமிழின் மீதுள்ள பற்று ஆகியன கவிதைகளாகியுள்ளன.

ஒரு சில கவிதைகள் தவிர, மிகுதி அனைத்து கவிதைகளும் ரி.ஆர்.ரி. TRT வானலை – லண்டன் டைம் ஆகியவைகளில் தவழ்ந்த கவிதைகளாகும். பல அறிவிப்பாளர்களும், தொலைக்காட்சி, வானொலிகளில் என் கவிதைகளை வாசித்துச் சிறப்புச் சேர்த்தவர்களாவர். இதில் அமரராகிய சகோதரர் 'வியூகன்' (கீழ்கரவைப் பொன்னையன்) கவிதைகளை அக்குவேறு ஆணிவேறாக அலசுவார்.

வானலையில் 'சாளரம்' எனும் இலக்கிய நிகழ்ச்சியில் அவருடன் 'கவிசமர்'ம் நடத்தியுள்ளேன் – அது என் பாக்கியமாகும். அவரின் ஆன்மா என்னை ஆசீர்வதிக்கும் என மனதார எண்ணுகிறேன்.

தமது அரும்பெரும் நேரத்தை பாவித்த மதிப்பிற்குரிய சகோதரர் "கம்பதாசன்", கம்பன் கழக திரு. ஜெயராஜ் 'சிறு குறிப்பு' என குறித்து பெரிய குறிப்பை எழுதித் தந்ததற்கும், இயக்குனர் நாயகமும் ஈழநாடு பத்திரிகை அதிபர் திரு. சபாபதி. சுப்பையா குகநாதன் 'அறிமுகம்' என எழுதித் தந்ததற்கும் என் மனமார்ந்த நன்றியைக் கூறுகிறேன்.

என் கவிதைகளை நூல் தொகுப்பாக்கிய மணிமேகலை பிரசுர நிறுவன குழுவினருக்கும், திரு. ரவி தமிழ்வாணன் அவர்கட்கும் என் மனம் நிறைந்த நன்றியைக் கூறுகிறேன்.

என்னில் பாதியாகி எனக்கு முழு ஆதரவும் தந்து திட்டமாய், திட்பமாய் உதவி அளிக்கும் என் அன்புக் கணவருக்கும், நல்ல பிள்ளைகளாக இருந்து மன அமைதி தரும் அன்பு மகனுக்கும் மகளுக்கும் நன்றியைக் கூறி, அவர்கள் ஆதரவை இன்னும் வேண்டி ஆண்டவன் ஆசியையும் வேண்டுகின்றேன். ■

## தமிழ்த் திரைப்படங்களுக்குத் தமிழ்ப் பெயர் சூட்டுவீர் !

**உணர்ச்சிக்கவிஞர் சிங்காரவேலன்**, திருச்சி-2.



மான் துள்ளித் திரியட்டும் திரைப்ப டத்தில்
மயில் துள்ளி ஆடட்டும் திரைப்ப டத்தில்
மீன் துள்ளிக் குதிக்கட்டும் திரைப்ப டத்தில்
மின்னட்டும் பெண்மீன்கள் திரைப்ப டத்தில்

ஏன் துள்ளிக் குதிக்கிறது ஆங்கி லம்தான்
எழிலான தமிழ்ப்பெயர்கள் இருக்கும் போது
தேன்தமிழில் திரைப்படங்கள் தயாரிப் போரே
தேங்கனிச்சொல் தமிழ்ப்பெயரைச் சூட்டு வீரே !

கடலலைபோல் தமிழ்மக்கள் திரண்டால் போதும்
களைபோன்ற ஆங்கிலமோ கருகிப் போகும் !
அடலேறாய்ப் புயற்காற்றாய் எழுந்தால் போதும்
ஆங்கிலமோ சருகாகிப் பறந்தே போகும் !

"விடமாட்டோம் ஆங்கிலத்தின் பெயரை" என்றே
வெறிக்கூட்டம் பிடிவாதம் செய்யு மானால்
நடமாடும் பிணமாய்நாம் இருக்க மாட்டோம்
நமதின்பத் தமிழ்காக்க எழுவோம் வெல்வோம் !.



## மனித நேய இலக்கியப் பரிசு - 2004

2004- இல் வெளிவந்த சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை வரவேற்கப்படுகிறது. பரிசு ரூ. 1000 /- நூல்கள் 2 பிரதி அனுப்ப வேண்டும். கடைசி நாள் 30.06.05

முகவரி :

திரு. **சோலைப்பிரியன்**, நிறுவனர்,
*பெரியார் காமராசர் பேரவை,*
"தமிழன் குடில்", 54 /4 புதூர் கிழக்குத் தெரு, ரெட்டியூர் (அஞ்),
சோலையார் பேட்டை, வேலூர் மாவட்டம். தொலைபேசி : 04179 - 24181



படிப்பகம்

www.padippakam.com

## அழிவிலாத் தமிழ்மொழி

எழிலாரும் ஆரணங்கே இன்பம் வேண்டி,
இப்போ தழைக்கின்றாய் இதுவா நேரம்.
மொழிகட்குத் தலைமொழியாம் நந்தமிழைக் கொல்ல
மந்திமொழி இந்தியினை கோலோச்ச எண்ணும்.
பழிகார வடவரையான் புதைத்தோடி வந்து
பாவாய்நின் இதழோடு என்னிதழும் சேர்த்து
அழிவிலா இன்பத்தேன் ஆனமட்டும் தருவேன்
அதுவரைக்கும் காத்திருப்பாய் முழுமதியே.

'மொழிப்போர் தியாகி'
**மு. பரமசிவம்**,
மேனாள் சட்டமன்ற உறுப்பினர், சேலம்–4.


ஏழைதாசன்

மலர் - 13 இதழ் -9
திருவள்ளுவர் ஆண்டு - 2036
வைகாசி

'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்'
- கண்ணதாசன்

ஏழைதாசன் முதல் புரவலர்
உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை–அமெரிக்கா

**கட்டண விபரம்**

உள்நாடு (அஞ்சல் வழி)

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | ரூ. 60/- |
| வாழ்நாள் கட்டணம் : | ரூ. 600/- |
| புரவலர் நன்கொடை : | ரூ. 1000/- |

வெளிநாடு (வான்வழி)

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | US $ 10/- |
| வாழ்நாள் கட்டணம் : | US $ 100/- |
| புரவலர் நன்கொடை : | US $ 200/- |

வெளிநாடு விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழுப்பக்கம் : | ரூ. 1000/- |
| அரைப்பக்கம் : | ரூ. 500/- |

உள்நாடு விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழுப்பக்கம் : | ரூ. 500/- |
| அரைப்பக்கம் : | ரூ. 250/- |

**பெயர் :** EALAIDHASON,
**வங்கி இலக்கம் :** A/c No. 90259,
**முகவரி :** INDIAN BANK,
PUDUKKOTTAI - 622 001,
TAMILNADU, INDIA.


## கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை...?

◇ என் நண்பனின் கடையில்
கண்ணில் பட்டது – ஒரு
கழுதையின் படம் !
அதன் கீழே ஒரு வாசகம் ...
'என்னைப் பார் !
யோகம் வரும்' ... !

◇ நகைத்தபடி இது குறித்து
நண்பனிடம் கேட்டேன் ... !
'முன்னோரின் நம்பிக்கை இது !
என்ன செய்ய ? '... என்றான்.

◇ பூக்களின் படம் வைத்திருந்தால்
அழகென்று ரசிக்கலாம் !
ஞானியின் கண்ணிரண்டை
படமாக வைத்திருந்தால் ...
கண்டு வியக்கலாம் !

◇ நாயின் படம் இருந்தால் கூட
நன்றியை உணரலாம் !
பறவையின் படம் என்றால் கூட
பார்த்துப் பார்த்து மகிழலாம் !

◇ போயும் போயும் .....
கழுதையின் படம் வைத்து
பூசையும் செய்கின்றாயே ! ...
பரந்தாமனின் நினைவு வர
பன்றி படம் வைப்பாயா நீ ? ...

◇ என நான் கேட்க...
கையில் கொம்புடன்
அடிக்க ஓடி வந்தான் !

◇ நல்ல வேளை ! ... என்னை அல்ல ! ...
அந்த நேரத்தில்
அங்காடி முன்னே
வந்து நின்ற
'நிஜக் கழுதை' யை ! ...

- பாவலர் **கருமலைப் பழம் நீ,**
வியாசர்பாடி, சென்னை–39.

உறுப்பினர் கட்டணம்
செலுத்தாதவருக்கு
இதழ் அனுப்ப இயலாது.



படிப்பகம்

www.padippakam.com



# தீராத நோய்கள் எல்லாம் தீர்க்கும் இவன் ஒரு சித்தன் இவன் தொட்டிடில் பிணிகள் போம் (அருள்வாக்கு)

சித்த மருத்துவ மேதை
அரிமா டாக்டர் **A.தேவராஜன்,** R.M.P. (IND) C.B.I.M. அவர்கள்

**கீழ்கண்ட நோய்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கிறார்**

**எய்ட்ஸ், மூலம், பவுத்திரம், ஆணிக்கால், சிறுநீரக கல்லடைப்பு (அறுவை சிகிச்சை இன்றி) முகவாத சன்னி, வயிற்றுவலி, வெள்ளை, வெட்டை, பெரும்பாடு, மலட்டுத்தன்மை, குழந்தைகள் உண்டாகுமா? உண்டாகாதா? என்பதை சிறிய பரிசோதனையின் மூலம் துல்லியமாக கூறப்படும், சிகிச்சையும் அளிக்கப்படும்.**

ஆண்மைக்குறைவு, சொப்பன ஸ்கலிதம், சருமவியாதிகள், இருமல், இளைப்பு மற்றும் பல நோய்களுக்கு சிகிச்சை உண்டு,

மருத்துவத் துறையில் 50 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். 79 வயது நிரம்பியவர். சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றியவர். எய்ட்ஸ் சிகிச்சைக்காக சிறப்பு பயிற்சி பெற்றவர். அரிமா இயக்கத்தில் 'எய்ட்ஸ்' நோய் பிரிவிற்கு மதுரை மாவட்டத்திற்கு தலைவராக இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டான் முதலிய நாடுகளுக்கு சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர். லண்டன், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து நாடுகளில் இருந்து வந்த எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து புகழ்பெற்றவர். அமைச்சர்களாலும், பத்திரிக்கையாளர்களாலும் பாராட்டப் பெற்றவர்.

சித்த மருத்துவ மேதை
அரிமா டாக்டர் **A.தேவராஜன்,** R.M.P.(IND)C.B.I.M.

**மனோன்மணி மருத்துவமனை**

7-3/125 பெருமாள்கோவில் தெரு, பேரையூர் (TK)
மதுரை (DT) - 625 703. ☎ : (04549) 275695

**Cell : 94437-75695**

பிரதிமாதம் 10,25 தேதிகளில் மதுரையில் கீழ்கண்ட முகவரியில் டாக்டரை சந்தித்து சிகிச்சை பெறலாம். நேரம் காலை 11 மணி முதல் மாலை 7 மணி வரை. மற்ற நாட்களில் எனது புதல்வர் டாக்டர் D.C. செங்குட்டுவன் அவர்களிடம் ஆலோசனை பெற்று மருந்துகள் பெற்றுக்கொள்ளலாம். பேரையூர் வர விரும்பினாலும் வரலாம்.
தபால் மூலம் ஆலோசனை பெற ரூ. 25/- அனுப்பவும்.

டாக்டர் **D.C. செங்குட்டுவன்** B.Sc.D.H.M.S.,
டாக்டர் **ப்ரீதா செங்குட்டுவன்** D.H.M.S.,
போன் : (0452) 521354 (கிளினிக்)
650692 (வீடு)

## ஹோமியோ ஹோம்

**ப்ரீதா கம்ப்யூட்டரைஸ்டு ஹோமியோ கிளினிக்**

*S -7, கிங்ஸ் கோர்ட், அன்னபூரணா ஹோட்டல் அருகில்,*
*அண்ணா பஸ் நிலையம், மதுரை - 625 020.*

<u>பஸ்ஸில் இறங்க வேண்டிய இடம்:</u>
அண்ணா பஸ் நிலையம், மதுரை
வேலை நேரம்
காலை 9.30 முதல் 11 மணி வரை
மாலை 7.30 முதல் 9 மணி வரை
சனி காலை 9.30 முதல் 11 மணி வரை
சனி பிற்பகல், ஞாயிறு விடுமுறை



படிப்பகம்

www.padippakam.com

EALAIDHASON ★ TAMIL MONTHLY ★ RNI Regd. No. 55308/92
R.C. No. 22449/98 ❁ 'Registered' No. PMG/CR/01/03-05/PDK

## உலகளாவிய ஏழைதாசன் கண்டு மகிழ்ந்தேன்

பேரன்புப் பெருந்தகையீர்,

வணக்கம். நலம், நலமே இனிது சூழ்க.

தங்களின் முதல் கடிதம் 20-12-04 இல் எழுதியது கிடைத்தது. அடுத்தது தங்களின் 'ஏழைதாசன்' சிற்றிதழ் 7-4-05 ஆம் நாள் என்னிடம் கிடைத்தது.

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரலாகத் திகழ்ந்து வரும் சிற்றிதழ் கண்டு மகிழ்ந்தேன். சின்னஞ்சிறிய ஏடாக இருந்தாலும் அதனுள் அள்ளி வந்த கருத்துக்களும் செய்திகளும் தேவையானதாகவும், இலக்கிய விரும்பிகளுக்கு தீனி போடக் கூடிய அமுதசுரபியாகவும் திகழ்வது எனக்குப் பிடித்திருக்கிறது.

தங்கள் முதல் மடல் செய்திக்கு உடன் பதில் எழுதவில்லை. அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். கீழைநாட்டுக் கவிதை மஞ்சரி - 2005 ஆம் ஆண்டு இரண்டாம் பாகம் பற்றி விளம்பரம் செய்திருந்தோம். அதையே தாங்கள் இதழான ஏழைதாசனிலும் விளம்பரம் செய்த விபரம் கவிஞர்கள் எனக்கு அனுப்பி இருக்கும் கவிதைகள் மூலம் அறிந்தேன்.

இதனுடன் விளம்பரத்திற்கான நகல் உள்ளது. மே திங்கள் ஏழைதாசனில் விளம்பரம் செய்ய வேண்டுகின்றேன். அவ்விதழ் ஒன்றும் அனுப்பி வைக்கவும். கட்டணம் வங்கிக்கு அனுப்பி வைக்கின்றேன். தங்களின் அன்பார்ந்த பதிலையும் ஆதரவையும் எதிர்நோக்கி, இப்போதைக்கு இம்மடலை இனிது நிறைவு செய்கின்றேன்.

– சிங்கைத் தமிழ்ச்செல்வம்;
சிங்கப்பூர்.



நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்
– மகாகவி பாரதியார்

பெறுநர் திரு .

Published, Printed and Owned by S. Vijayakumar.
Printed at Ealaidhason Printers, Pudukkottai - 2.
Published from 26, Adappanvayal 8 th Street, Pudukkottai - 2, Tamil Nadu, INDIA.
Editor : S. VIJAYAKUMAR B.A., Telephone No: 0091 - 04322 - 226 426.

படிப்பகம்